# புதுவை பல்கலைக்கழக அலுவலா் கூட்டுறவு கடன் சங்கம் (அளவறை) எண்.பி.508
ஆர்.வி. நகர் காலாப்பட்டு புதுச்சேரி-14

---

## தேர்தல் பேரவைக் கூட்ட அறிவிப்பு

அன்பார்ந்த உறுப்பினர்களே!

வணக்கம், நமது சங்கத்தின் நிர்வாகக்குழுவிற்கு கீழ்கண்ட தொகுதி விவரப்படி ஒன்பது (9) இயக்குநர்களை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் இவ்வறிப்பில் கண்டுள்ள அட்டவணைப்படி நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்தேர்தல் 1973 ஆம் ஆண்டு புதுவை கூட்டுறவுச் சங்கங்களின் விதி 32-ன் படி நடத்தப்படும்.

## தொகுதி விபரம்

| வ.எண் | தொகுதி எண். | தொகுதி விபரம் | தேர்ந்தெடுக்கப்பட உள்ள இயக்குநர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | I | ஆசிரியர் மற்றும் அதிகாரி (Group A & B) ஆகிய சங்க உறுப்பினர்கள் | 3 |
| 2 | II | ஆசிரியர் மற்றும் அதிகாரி அல்லாத உறுப்பினர்கள் ஆகிய (Group C & D) சங்க உறுப்பினர்கள் (இதில் ஒரு இயக்குநர் பதவி அட்டவணை இனத்து உறுப்பினருக்கு (SC Member) ஒதுக்கப்பட்டுள்ளது | 6 |

தேர்ந்தெடுக்கப்படும் இயக்குனர் குழு உறுப்பினர்கள் எதிர்வரும் 01.10.2019(தேதி) முதல் 31.03.2022 வரை பதவி வகிப்பார்கள். வாக்களிக்க தகுதி வாய்ந்த உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு நிர்வாகக் குழு தேர்தலில் பங்கு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(நிர்வாகக் குழுவின் முடிவின்படி)

இடம்: புதுச்சேரி

நாள்: 04.09.2019

**A. விஜயவேலன்**
துணைத்தலைவர்

## தேர்தலுக்கான கால அட்டவணை

| வ. எண் | நடவடிக்கை விபரம் | நாள் & கிழமை | நேரம் | இடம் |
|---|---|---|---|---|
| 1 | வாக்களிக்க தகுதி வாய்ந்த வாக்காளர்கள் பட்டியல் வெளியிடுதல் | 10.09.2019 செவ்வாய் | காலை 11.00 மணி | சங்க அறிவிப்பு பலகை |
| 2 | வாக்காளர் பட்டியலில் ஆட்சேபணை மற்றும் திருத்தம் ஏதேனும் இருப்பின் தெரிவித்தல் | 12.09.2019 வியாழன் | மாலை 4.00 மணிக்குள் | சங்க அலுவலகம் |
| 3 | தகுதியுடைய வாக்காளர்களின் இறுதிப் பட்டியல் வெளியிடுதல் | 13.09.2019 வெள்ளி | மதியம் 12.30 மணி | சங்க அறிவிப்பு பலகை |
| 4 | வேட்பு மனுக்கள் தாக்கல் செய்தல் | 17.09.2019 செவ்வாய் | காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை | சங்க அலுவலகம் |
| 5 | வேட்பு மனுக்கள் பரிசீலனை செய்தல் | 18.09.2019 புதன் | காலை 10.30 மணி | சங்க அலுவலகம் |
| 6 | தகுதி வாய்த வேட்பாளர்களின் பட்டியல் வெளியிடுதல் | 18.09.2019 புதன் | வேட்பு மனுக்கள் மீதான பரிசீலனை முடிந்தபின்பு | சங்க அலுவலகம் |
| 7 | வேட்பு மனுக்களை திரும்ப பெறுதல் | 19.09.2019 வியாழன் | மாலை 5.00 மணக்கு முன்பாக | சங்க அலுவலகம் |
| 8 | தகுதி வாய்ந்த வேட்பாளர்களின் இறுதிப் பட்டியல் வெளியிடுதல் | 19.09.2019 வியாழன் | மாலை 5.30 மணிக்கு | சங்க அலுவலகம் |
| 9 | போட்டியிருப்பின் வாக்கு பதிவ நடத்துதல் | 26.09.2019 வியாழன் | காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணிவரை | ஜவஹர்லால் நேரு ஆடிட்டோரியம் |
| 10 | தேர்தல் முடிவுகள் அறிவித்தல் | 1. போட்டியில்லா தொகுதிகளுக்கு 19.09.2019 அன்று மாலை 5.30 மணிக்கு தேர்தல் அதிகாரியால் முடிவுகள் அறிவிக்கப்படும்.<br>2. போட்டியிருப்பின் 26.09.2019 அன்று 2.00 மணிக்குமேல் வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும். | | |

# குறிப்புகள்

1. 09.09.2019 அன்று வெளியிடப்படும் வாக்காளர் பட்டியல் குறித்து ஆட்சேபனை/ திருத்தம் செய்ய விரும்பும் உறுப்பினர்கள் தங்களின் ஆட்சேபனையை எழுத்து மூலமாக தகுந்த ஆதாரங்களுடன் 12.09.2019 அன்று மாலை 4.00 மணிக்குள் சங்க துணைத்தலைவரிடம் தெரிவிக்க வேண்டும். அதன் பிறகு வரும் கடிதம் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

2. தகுதி வாய்த வாக்காளர்களின் இறுதிப்பட்டியல் வேண்டுவோர் ஒவ்வொரு தொகுதிக்கும் ரூ.100/- (ரூபாய் நூறு மட்டும்) செலுத்தி எழுத்து மூலமாக விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளலாம்.

3. தேர்தலில் போட்டியிட விரும்பும் தகுதியுடைய உறுப்பினர்கள் தங்களின் வேட்பு மனுவினை முழுமையாகப் பூர்த்தி செய்து நேரிடையாகவோ அல்லது அவவேட்பு மனுவினை முன் மொழிந்தவர் அல்லது வழிமொழிந்தவர் மூலமாகவோ தேர்தல் அதிகாரியிடமோ அல்லது இதற்கென அவரின் அதிகாரம் பெற்றவரிடமோ தாக்கல் செய்தல் வேண்டும்.

4. வேட்பு மனுக்களின் பரிசீலனையின் போது ஆட்சேபணை செய்ய விரும்பும் உறுப்பினர்கள் தங்களின் ஆட்சேபணையை எழுத்து மூலமாக தகுந்த ஆதாரங்களுடன் தேர்தல் அதிகாரியிடம் தெரிவிக்க வேண்டும்.

5. வேட்பு மனுக்களில் மனுக்களில் முன்மொழிபவர் மற்றும் வழி மொழிபவர்கள். வேட்பாளர் எந்த தொகுதியைச் சார்ந்தவரோ அந்தத் தொகுதியைச் சார்ந்தவராக மட்டும் இருத்தல் வேண்டும்.

*****

பெறுதல்:

அனைத்து உறுப்பினர்கள்

......................................................

....................................................